## இயற்கை மரபு ஸுன்னஹ்கள்

### அவை அல்லாஹ் மனிதர்களுக்கு இயல்பாகவே கொடுத்துள்ள பண்புகள்

அடிப்படையில் மனிதனுக்கு அவற்றின் பக்கம் ஆர்வமும் தேவையும் இருக்கும். எனினும், அவனுக்கு சூழவுள்ள சமூகத்தின் தாக்கத்தால் அவ்வியல்புத் தன்மைகளில் மாற்றம் ஏற்படலாம். அவை பற்றி ஆதாரபூர்வமான நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளன.

| ஸுன்னஹ் | சட்டம் | சிறுவிளக்கம் |
|---|---|---|
| [1] **மீசையைக் கத்தரித்தல்** | சுன்னத். ஒட்டுமொத்தமாக மழிப்பது மக்ரூஹ். | மீசையை கத்தரிப்பதும்; குறைப்பதும்; உதட்டின் ஓரங்கள் தென்படும் அளவிற்கு நீக்குவதும் சுன்னத்தாகும். |
| [2] **தாடியை வளர விட்டு விடுதல்** | வாஜிப் (கட்டாயம்) | தாடியை மழிப்பது ஹராமாகும். ஏனெனில், அவ்வாறு செய்வது தாடியை விட வேண்டும்; வளர்க்க வேண்டும் என்ற நபி ﷺ அவர்களின் கட்டளைக்கு முரணானதாகும். |
| [3] **பல் துலக்குதல்** | சுன்னஹ் முஅக்கதஹ் (வலியுறுத்தப்பட்ட சுன்னத்) | அதாவது 'அறாக்' குச்சி, அல்லது அது போன்றதை பற்களைச் சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்துவதாகும். அது பொதுவாக எல்லா நேரங்களிலும் சுன்னத்தாகும். எனினும், அது பின்வரும் சந்தர்பங்களில் வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். அவை: வுளூ செய்யும்போது, தொழுகைக்கு முன், வீட்டுக்குள் மற்றும் மஸ்ஜிதுக்குள் நுழையும் போது, குர்ஆன் ஓதும் போது, விழித்தெழுந்த பிறகு, மரணித்த பிறகு, வாயின் வாடையில் மாற்றம் ஏற்படுகின்ற போது |

| | | |
|---|---|---|
| [4] நாசிக்கு தண்ணீர் செலுத்துதல் | வுளூவின் சுன்னத்துக்களில் ஒன்று | அதாவது மூக்கினுள் தண்ணீர் விட்டு; வெளியேற்றிக் கழுவுவது. |
| [5] நகம் வெட்டுதல் | சுன்னத். இதனை 40 நாட்களுக்கு மேல் தாமதப்படுத்தாமல் இருப்பது அவசியம் | அதாவது நகங்களை வளர்வதற்கு விட்டுவிடுவதால் அவற்றுக்கு அடியில் அழுக்குகள் படிவதன் காரணமாக அவற்றை வெட்டி விட வேண்டும். |
| [6] மடிப்புகளை கழுவுதல் | சுன்னத். | விரல்களின் மடிப்புக்கள் போன்ற அழுக்குகள் படியும் இடங்களை சுத்தம் செய்தல். |
| [7] அக்குள் முடியை பிடுங்குதல் | சுன்னத். இதனை 40 நாட்களுக்கு மேல் தாமதப்படுத்தாமல் இருப்பது அவசியம் | அதாவது, அக்குள்களில் முளைக்கும் முடிகளை நீக்குதல். அவற்றை பிடுங்குவதன் மூலமோ மழிப்பதன் மூலமோ வேறு வழிகளிலோ நீக்க முடியும். இதனால் சுத்தம் ஏற்படுவதோடு, துர்வாடையும் நீக்கப்படுகிறது. |
| [8] அந்தரங்க முடியை மழித்தல் | சுன்னத். இதனை 40 நாட்களுக்கு மேல் தாமதப்படுத்தாமல் இருப்பது அவசியம் | அதாவது மறைவிடத்தை ஒட்டி முளைக்கும் முடிகளை நீக்குதல். அவற்றை மழிக்காமல் வேறு உபகரணங்களை கொண்டும் நீக்க முடியும். |
| [9] மலசலம் கழித்த பிறகு சுத்தம் செய்தல் | இயற்கைத் தேவையை நிறைவேற்றும் போது கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களில் ஒன்று | முன், பின் துவாரங்களில் இருந்து வெளிப்படுகின்றவற்றை நீரினால் கழுவி அல்லது அதுபோன்ற ஒரு செயல்பாட்டினால் நீக்கி; வெளிப்படும் இடத்தையும் அதற்கு அண்மித்த இடங்களையும் சுத்தப்படுத்தி கொள்ளல். |

| | | |
|---|---|---|
| [10] வாய் கொப்பளித்தல் | வுளூவின் சுன்னத்துக்களில் ஒன்று | வாயினுள் தண்ணீரை உட்செலுத்தி, வெளியேற்றி வாயைக் கழுவிக் கொள்ளல். |
| அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக ஆஇஷஹ் (றழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவித்தார்கள்: **பத்து இயற்கை மரபுகள் இருக்கின்றன. மீசையைக் கத்தரித்தல், தாடியை வளர விட்டு விடுதல், பல் துலக்குதல், மூக்குக்குள் தண்ணீர் செலுத்திக் கழுவுதல், நகம் வெட்டுதல், மடிப்புகளை கழுவுதல், அக்குள் முடியை பிடுங்குதல், கீழ் முடியை மழித்தல், மலஜலம் கழித்துவிட்டு தண்ணீரினால் சுத்தம் செய்தல்**. இந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளரான முஸ்அப் என்பவர் கூறுகிறார்: பத்தாவதை நான் மறந்து விட்டேன். அது வாய் கொப்பளிப்பதாக இருக்கலாம். (ஆதாரம்: முஸ்லிம்) | | |
| [11] கத்னஹ் (விருத்தசேதனம்) | ஆண்களுக்கு செய்வது கட்டாயமாகும். பெண்களுக்கு தேவைப்பட்டால் செய்வது விரும்பத்தக்கதாகும். | அந்தரங்க உறுப்பின் முன்பகுதியை மூடியுள்ள தோலினை வெட்டி விடுதல். அழுக்குகள் தேங்கி நிற்காமலும் சிறுநீர் கழித்துவிட்டு இலகுவாக சுத்தம் செய்து கொள்வதற்காகவும் இவ்வாறு செய்யப்படுகிறது. |
| நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூஹுறைறஹ் (றளியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவித்தார்கள்: **பின்வரும் ஐந்தும் இயற்கை மரபுகளில் உள்ளவையாகும். அவை கத்னஹ்...** (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்). | | |

அறபு மூலம்: அஷ்ஷெய்க் ஹைஸம் ஸர்ஹான்

فتح المعين في تقريب منهج السالكين وتوضيح الفقه في الدين للشيخ هيثم سرحان حفظه الله

முதல் பிரதி: ஹி 1443 / கி.பி 2022

தமிழில்: ஹுஸைன் இப்னு றபீக் மதனி